# பத்திரிக்கை குறிப்பு

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விழுப்புரம் பிரிவு அலுவலகத்தை அணுகி, தான் தன் தந்தையிடமிருந்து தானம் மூலம் பெறும் நிலத்தினை பதிவு செய்வதற்கு வழிகாட்டி மதிப்பினை நிர்ணயம் செய்யவேண்டி திண்டிவனம் இணை 2 துணை சார்பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.சங்கரலிங்கம், சார் பதிவாளர், இணை 2 துணை சார்பதிவாளர் அலுவலகம், திண்டிவனம் மற்றும் திரு.சரவணன், ஆவண எழுத்தர் ஆகியோர் தங்களுக்கு ரூ.50,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 29.03.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.சங்கரலிங்கம், சார் பதிவாளர், மற்றும் திரு.சரவணன், ஆவண எழுத்தர் அவர்கள் புகார்தாரரிடமிருந்து ரூ.50,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Villupuram detachment, and gave complaint that he had applied for fixing guidelines value for registration of a property obtained through dhana settlement from his father at Joint II Sub Registrar Office, Thindivanam, for which Tr.Sankaralingam, Sub Registrar and Tr.Saravanan, Document Writer demanded Rs.50,000/- as bribe for processing his application and fixing a nominal guideline value. In this connection a case was registered and a trap was organized today 29.03.2022.

During trap proceedings, Tr.Sankaralingam, Sub Registrar and Tr.Saravanan, Document Writer reiterated their earlier demand and received the bribe amount of Rs.50,000/- from the complainant. Both accused were arrested.